செய்தி வெளியீடு எண்: 788 நாள்: 20.11.2017

**செய்தி வெளியீடு**

இன்று 20.11.2017 தலைமைச்செயலகத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு பல்லுயிர் பரவல் வாரியத்தின் 6வது கூட்டம் நடைபெற்றது.

மக்கள், இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலில் ஒரு எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றன. நமது நாட்டில் உள்ள இயற்கை வளங்கள் ஒட்டுமொத்தமாக அழியும் அபாயம் உள்ளதால் மத்திய அரசின் ‘‘உயிர் பரவல் சட்டம் 2002’’ன் மூலம் இயற்கை வளங்களை முறையாக பாதுகாப்பதோடு உள்ளூர் மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து, அவர்களின் ஒத்துழைப்போடு இயற்கை வளங்களை பாதுகாக்க வழிவகை செய்ய இவ்வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராயிருப்பதால் உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்கள்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு முகமது நசிமுதின், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் (வனத்துறை தலைவர்) திரு பி.சி.தியாகி, இ.வ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) முனைவர் ஹி. பசவராஜு, இ.வ.ப., தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் உறுப்பினர் செயலர் திரு அ. உதயன், இ.வ.ப., மற்றும் வாரியத்தின் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**